**செப்டம்பர் – 23**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு அரசாங்கமானது சிறப்பு வாய்ந்த 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் நீலக் குறிஞ்சி மலரின் (Strobilanthus kunthianus) தாவரங்களை பாதுகாப்பதற்காக திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. நீலக் குறிஞ்சி தாவரங்களை வணிக ரீதியாக பொதி கட்டுதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்காக இத்திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது
- இந்திய காப்பீட்டு மற்றும் ஒழுங்காற்று வளர்ச்சி முகமையானது (IRDAI - Insurance Regulatory and Development Authority of India) காப்பீட்டில் ஏற்படும் முக்கிய ஒழுங்குமுறை பிரச்சனைகள் மற்றும் நிதித் தொழிநுட்பத்தில் (Financial-technology) ஏற்படும் இடைவெளி ஆகியவை குறித்து ஆராய்வதற்காக, தனது தலைமைப் பொது மேலாளரான ரன்தீப் சிங் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## நீர்த் திட்ட நிதிகளுக்கு உதவுவதற்காக புதிய நிறுவனம்

- தமிழ்நாடு மாநில அரசானது நீர்த் திட்டங்களை செயல்படுத்துவதற்கு உதவுவதற்காக 'நீர் வளங்கள் பாதுகாப்பு மற்றும் நிதி மீட்டமைத்தல் நிறுவனம்' என்ற புதிய நிறுவனத்தை தொடங்கவிருக்கிறது.
- இப்புதிய துறையானது நீர் வளங்களை மேம்படுத்துவதற்காக புத்தாக்கத் திட்டங்கள் மற்றும் திட்டங்கள் குறித்த வரைவைத் தயாரிக்க பொதுப்பணித் துறைக்கு உதவும்.

## தேசிய விளையாட்டு விருதுகள் 2018 – தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

- 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய விளையாட்டு விருதுகளில் டேபிள் டென்னிஸ் நட்சத்திர வீரரான ஜி. சத்யன் என்பவருக்கு அர்ஜுனா விருது வழங்கப்படுகிறது.




- டேபிள் டென்னிஸ் பயிற்சியாளரான ஏ. ஸ்ரீனிவாஸ் ராஸ் என்பவருக்கு துரோணாச்சாரியா விருது வழங்கப்படுகிறது.
- தேசிய விளையாட்டுகளில் மிகச்சிறந்த சாதனைகளை அங்கீகரிப்பதற்காக அர்ஜூனா விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்திய விளையாட்டுப் பயிற்சியாளர்களை கௌரவிப்பதற்காக துரோணாச்சாரியா விருது வழங்கப்படுகிறது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் முதலாவது நிலக்கரி - வளிமயமாக்கல் உரத்தொழிற்சாலை

- இந்தியாவின் முதலாவது 'Pet Coke' எனப்படும் கரி கலப்புடன் கூடிய நிலக்கரி - வளிமயமாக்கலை அடிப்படையாகக் கொண்ட உரத் தொழிற்சாலையின் தொடக்கப் பணியை பிரதம அமைச்சர் (செப்டம்பர் 22) தொடங்கி வைத்தார். இந்த உரத் தொழிற்சாலை ஒடிஸாவின் தால்ச்சரில் அமைக்கப்படவிருக்கிறது.





- நிலக்கரி வளிமயமாக்கலை அடிப்படையாகக் கொண்ட உரத் தொழிற்சாலையானது தால்ச்சர் உரங்கள் நிறுவனத்தால் மேம்படுத்தப்படுகிறது.

- இப்பணிகள் முடிவடைந்தால், இந்த தொழிற்சாலையானது ஆண்டுக்கு 1.27 மில்லியன் மெட்ரிக் டன்கள் (MMTPA - Million Metric Tonne Per Annum) வேம்பு பூசப்பட்ட யூரியா கட்டிகளை உற்பத்தி செய்யும் திறன் பெற்றது.
- வேம்பு பூசப்பட்ட யூரியாவானது மண்ணில் ஏற்படும் நைட்ரஜன் அரிப்பைக் குறைக்கிறது. மேலும் யூரியாவை விவசாயப் பயன்பாட்டில் இருந்து வேறு பயன்பாட்டுக்கு மாற்றப்படுவதை கண்காணிக்கிறது.
- இந்த ஆலையில் உற்பத்தி செய்யப்படும் கார்பன்-டை-ஆக்ஸைடு போன்ற மாசுபடுத்திகள் யூரியா மற்றும் இதர துணைப் பொருட்களை தயாரிப்பதற்காக மறுசுழற்சி செய்யப்படும்.

## எல்லைக் கள ஆய்வுப் பணி

- நேபாளம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையேயான எல்லை பணிக் குழுவின் (BWG - Boundary Working Group) ஐந்தாவது கூட்டம் காத்மாண்டுவில் நடைபெற்றது.
- எல்லைக் கள ஆய்வுப் பணியில் அதிக தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக்கோள் புகைப்படங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஆராய இரு நாடுகளும் இச்சந்திப்பின் போது ஒப்புக் கொண்டன.




- மேலும் இரு நாடுகளும் மனிதர்கள் வாழாத நில ஆக்கிரமிப்புகள் மற்றும் எல்லை தாண்டிய அத்துமீறல்கள் ஆகியவற்றை தொடர்ந்து கணக்கிட ஒப்புக் கொண்டன.
- BWG என்பது எல்லைக் கோட்டுப் பகுதிகளின் கட்டுமானம், மறுசீரமைப்பு மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள 2014 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய இரு நாடுகளும் இணைந்து உருவாக்கிய அமைப்பாகும்.
- BWG-ன் 4வது கூட்டம் உத்தரகண்ட்டின் (இந்தியா) டேராடூனில் நடைபெற்றது.

## ஜார்சகுடா விமான நிலையத்தை பிரதமர் திறந்து வைத்தார்

- ஒடிசாவின் ஜார்சகுடாவில் புதிய விமான நிலையத்தை பிரதம அமைச்சர் (செப்டம்பர் 22) திறந்து வைத்தார். இவ்விமான நிலையம் "ஒடிசாவின் சக்திமையம்" என்றும் அழைக்கப்படுகிறது.
- பிராந்திய இணைப்புத் திட்டமான (Regional Connectivity Scheme - RCS) உடான் திட்டத்தின் கீழ் (UDAN) புவனேஷ்வர், ராய்ப்பூர் மற்றும் ராஞ்சி ஆகிய நகரங்களுக்குத் தேவையான இணைப்பை ஏற்படுத்தும் ஒடிசாவின் முதலாவது விமான நிலையம் இதுவாகும்.
- ஜார்சகுடா விமான நிலையத்தைத் தவிர, ஒடிசாவில் மேலும் 3 விமான நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன
    - ஜேப்பூர் (கோரபுட் மாவட்டம்)
    - ரூர்கேலா (சுந்தர்கார்க் மாவட்டம்) மற்றும்
    - உட்கேலா (கல்ஹாந்தி மாவட்டம்)

  இவ்விமான நிலையங்கள் RCS திட்டத்தின் கீழ் கடலோர மாநிலமான ஒடிசாவின் தொலைதூரப் பகுதி மற்றும் கடைக்கோடி பகுதிகளுக்கு இணைப்பை ஏற்படுத்தும்.
- ஜார்சகுடா விமான நிலையமானது புவனேஸ்வருக்கு அடுத்து பயன்பாட்டுக்கு வரும் ஒடிசாவின் இரண்டாவது விமான நிலையமாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## மசாலாப் பத்திரங்கள் - இரட்டை முறையில் பட்டியலிடுதல்

- இந்திய தேசியப் பங்குச் சந்தையும் லண்டன் பங்குச் சந்தையும் மசாலாப் பத்திரங்களுக்கும், இந்திய நிறுவனங்கள் வெளியிடும் வெளிநாட்டு நாணயப் பத்திரங்களுக்கும் இரட்டை முறையில் பட்டியலிடும் வழிமுறையை உருவாக்குவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

**LONDON CALLING**

**What are masala bonds?**

- Rupee-denominated bonds issued in offshore capital markets

**Key advantage**

- Foreign exchange risk to be borne by investor

**Showing the way**

- HDFC is first Indian entity to list masala bonds on LSE; raised Rs 3,000cr


**In pipeline**

- NHAI, IRFC, PFC & REC

- ❖ இந்த ஒப்பந்தம் எதிர்காலத்தில் இந்தியாவிலிருந்து வெளியிடப்படும் அந்நிய நாணயப் பத்திரங்கள் லண்டனிலும் பட்டியலிடப்படும் வகையில் கூடுதல் கூட்டுப் பட்டியலிடும் முறைக்கான ஒரு வலுவான முன்னோட்டமாக இருக்கக் கூடும்.
- ❖ இந்த கூட்டு ஒப்பந்தம், 2019ம் ஆண்டில் இந்தியாவில் LSEG (London Stock Exchange Group) நிறுவனத்தின் தனியார் நிறுவனங்களின் உயர் வளர்ச்சிக்கான வியாபார ஆதரவு, முதலீடு திரட்டும் திட்டம் ஆகியவற்றுக்கான திட்டமான "Elite" என்ற திட்டத்தை வெளியிடுவதற்கான வாய்ப்புகளை ஆராயும்.
- ❖ இந்த ஒப்பந்தம் உள்நாட்டு, பிராந்திய மற்றும் உலகளாவிய முதலீட்டாளர்களை அணுகுவதற்கு வழிவகை செய்யும்.

## நாட்டிற்கான கூட்டு ஒப்பந்த கட்டமைப்பு

- ❖ உலக வங்கி மன்றமானது இந்தியாவின் உயர்நோக்கங்களான அதிகபட்ச, நீடித்த மற்றும் உள்ளடங்கிய வளர்ச்சியோடு ஒத்துப்போகும் வகையில் இந்தியாவிற்கான உயர் லட்சியமுடைய 5 ஆண்டுகால "நாட்டிற்கான கூட்டு ஒப்பந்த கட்டமைப்பை" அங்கீகரித்திருக்கின்றது.
- ❖ இந்த கட்டமைப்பானது இந்தியாவை தாழ்-நடுத்தர வருமான வகையிலிருந்து உயர் நடுத்தர வருமான வகைக்கு உயர்ந்துள்ளதாக அங்கீகரிக்கின்றது.




- இந்த கட்டமைப்பு மேலாண்மை அமைப்பின் முக்கிய கருவியாகும். மேலும் இது உலக வங்கி மன்றத்தின் நாடு சார்ந்த திட்டங்களை வழிகாட்டுவதற்கும் சீராய்வு செய்வதற்கும் அவற்றின் பலன்களை ஆய்வு செய்வதற்கும் உபயோகப்படும் கருவியாகும்.
- இது உலக வங்கி மன்றம் தனது உறுப்பு நாடுகள் அதன் தீவிர வறுமையை ஒழிப்பதற்கான முயற்சிக்கு உதவுவதன் மூலம் முக்கிய நோக்கங்களையும், வளர்ச்சி முடிவுகளையும் அடையாளப்படுத்தும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## மூன்றாவது செலுத்து தளம் - ககன்யான் திட்டம்

- இஸ்ரோவானது (Indian Space Research Organisation) ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீ ஹரிகோட்டாவில் விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் திட்டமான ககன்யான் திட்டத்தை மேற்கொள்ள மூன்றாவது செலுத்து தளத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றது.
- இதுவே இந்தியாவின் விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் முதலாவது திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் மூன்று விண்வெளி வீரர்கள் அடங்கிய குழுவானது விண்வெளியில் உள்ள நுண்ணிய புவியீர்ப்பின் மீது பரிசோதனைகளை மேற்கொள்ளும்.
- இத்திட்டத்தின் கீழ், இந்தியா மூன்று மனிதர்களை (ககன் யாத்ரீகர்கள்) 75வது சுதந்திரத் தினத்தற்குள்ளாக விண்வெளியில் அதன் தாழ் சுற்றுவட்டப்பாதைக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.
- இந்தக் குழுவானது இந்திய விமானப் படையாலும் இஸ்ரோவாலும் இணைந்து தேர்ந்தெடுக்கப்படும்.

### இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முன்மாதிரி வேக ஈனுலை (Fast Breeder Reactor)

- தமிழ்நாட்டில் கல்பாக்கத்தில் இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட 500 மெகாவாட் சக்தி உடைய முன்மாதிரி வேக ஈனுலையானது 2019 ஆம் ஆண்டில் உயர் செயல்திறனை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- உயர் செயல்திறன் என்கின்ற நிகழ்வு அணுஉலை நீடித்த சங்கிலித் தொடர் எதிர்வினையை அடையும் நிகழ்வாகும். அதாவது அணு உலையின் மையப் பாகத்தில் வெளிப்புற நியூட்ரான்கள் தேவைப்படாமல் அணுப்பிளவை தக்கவைக்கும் நிகழ்வாகும்.
- இந்த அணு உலை இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தால் உள்நாட்டுத் தொழில் நுட்பத்தால் வடிவமைக்கப்பட்டது.
- இது புளுட்டோனியம் மற்றும் யுரேனியம் ஆகியவற்றின் கலவையான MOX எரிபொருளை ($PuO_2$ & $UO_2$) எரித்து மின்சக்தியை உருவாக்குகின்றது.
- இது 1750 டன்கள் சோடியத்தை குளிர்விப்பானாகக் கொண்ட குளம் போன்ற வடிவிலான அணு உலையாகும்.

## முக்கிய தினங்கள்

### சைகை மொழிகளுக்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 23

- சர்வதேச காது கேளாதோருக்கான வாரத்தோடு சேர்த்து சர்வதேச சைகை மொழிகளுக்கான தினமானது ஆண்டுதோறும் செப்டம்பர் 23ம் தேதி உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த வருடம் சர்வதேச சைகை மொழிகளுக்கான முதலாவது தினம் ஆகும். இதன் கருத்துரு "சைகை மொழிகளுடன் சேர்த்து ஒவ்வொருவரும் இணைக்கப்பட்டுள்ளனர்."
- இந்த தினம் காது கேளாதவர்களின் மனித உரிமைகளை, அவர்கள் அதிகபட்சமாக உணரும் வகையில் சைகை மொழிகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை பரப்ப எண்ணுகின்றது.
- உலக காது கேளாதவர்களுக்கான கூட்டமைப்பால் (World Federation of the Deaf - WFD) சர்வதேச சைகை மொழிகளுக்கான தினம் முன்மொழியப்பட்டது.
- ஐ.நா. பொதுச்சபை 2017ம் ஆண்டு டிசம்பர் மாதம் இத்தினத்தை நிறுவியது. மேலும் இத்தினம் 1951ம் ஆண்டு உலக காதுகேளாதவர்களுக்கான கூட்டமைப்பை நிறுவிய தினமான செப்டம்பர் 23ம் தேதியோடு பொருந்திப்போகும் வகையில் உள்ளது.

## இதரச் செய்திகள்

## தட்சிண பாரத இந்தி பிரச்சார சபா - நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள்

- புதுதில்லியில் தட்சிண பாரத இந்தி பிரச்சார சபாவின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களை குடியரசுத் தலைவர் துவக்கி வைத்தார்.
- இந்த சபாவானது மத்திய அரசால் அளிக்கப்படும் மானியத்தைக் கொண்டு இயங்கும் ஒரு தனிச்சுதந்திர அமைப்பாகும்.
- சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட இந்த அமைப்பு தென்னிந்தியாவில் இந்தி மொழி பேசாத மக்களிடையே இந்தி எழுத்தறிவை பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1918ம் ஆண்டு மகாத்மா காந்தியின் ஆதரவுடன் இந்த சபையானது அன்னிபெசன்ட்டால் துவங்கப்பட்டது.

---------------